## தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக உழைத்த

# கலைஞரை ‘தாய்’ என்று சொல்வது மிகவும் பொருத்தமே!

## ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழாவில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,ஆக.26-**

**“தமிழ்மொழிக்காக, தாய் மொழியாம் தமிழ் மொழிக்காக உழைத்த கலைஞரை ‘தாய்’ என்று சொல்வது மிகவும் பொருத்தம்” என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**அமைச்சர் எ.வ.வேலு எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’நூல் வெளியீட்டு விழா நேற்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. புத்தகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பெற்றுக்கொண்டார்.**

**நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது:**

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு எழுதியுள்ள ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரை ஆற்றுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

### கலைஞர் நூல்கள்!

வரவேற்புரை மட்டுமல்ல இந்தப் புத்தகத்திற்கு அணிந்துரை அளிக்கின்ற வாய்ப்பையும் கொடுத்த அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் பதிப்பாளர் என்ற வகையில் மிகவும் பெருமையாகவும் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்கிறேன். கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் நாட்டுடமையாக்கியுள்ள இந்த அருமையான நேரத்தில், மகிழ்ச்சியான தருணத்தில் இந்த நூல் இங்கு வெளியாகிறது.

முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருங்கிப் பழகியவர்கள் ஏராளம். அவர்களில் கலைஞரின் அன்புக்குரிய தம்பியாக திகழ்ந்தவர்களில் முன்னணி வகிப்பவர் அண்ணன் வேலு அவர்கள். `எ.வ.வேலு என்றால், எதிலும் வல்லவர் வேலு' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம் கழகத் தலைவர் அவர்களும் தொடர்ந்து பாராட்டியிருக்கிறார்கள்.

இப்பொழுது அவர் எதிலும் வல்லவர் வேலு மட்டுமல்ல, இன்றைக்கு எழுத்திலும் வல்லவர் வேலு என்று சொல்கிற அளவுக்கு, இந்தப் புத்தகத்தை மிகச் சிறப்பாகக் கொடுத்திருக்கிறார்.

### ஆற்றல் பெற்றவர்!

திருவண்ணாமலையின் அடையாளம் கார்த்திகை தீபம் மட்டுமல்ல, கழகத்தின் திருவண்ணாமலை வேலு அவர்களும்தான். தி.மு.கவின் கோட்டையாக திருவண்ணாமலை மாவட்டத்தையே மாற்றி வைத்திருக்கிறார். அண்ணன் வேலு அவர்கள். எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதை வெற்றியுடன் முடிக்கும் ஆற்றல் பெற்றவர், தலைவர் நினைப்பதைச் சாதித்துக் காட்டுபவர்தான் அண்ணன் வேலு அவர்கள்.

### பொதுப்பணி எனக்குப் புதிதல்ல!

1967ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணாவின் அமைச்சரவையில், பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பை ஏற்றார். அப்போது நிரூபர்களுடன் பேசும்போது சொன்ன வார்த்தை இது. ``பொதுப்பணி என்பது எனக்குப் புதிதல்ல. அது பழைய பணிதான். நான், பட்டுக்கோட்டை அழகிரிசாமியை, தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவைக் கண்ட நாள் முதல் நான் பொதுபணியில்தான் இருந்து வருகிறேன். அதனால், அண்ணா இன்றைக்கு எனக்கு பொதுப் பணித்துறை அமைச்சரவையும் கொடுத்திருக்கிறார்'' என்பது கலைஞர் சொன்ன வார்த்தை.

அதைப் போலவே பொதுப்பணியில் எப்பொழுதும் சிறந்து விளங்கி வரும் அண்ணன் வேலு அவர்கள் இன்றைக்கு பொதுப் பணித்துறைக்கு அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். கடந்த மூன்று ஆண்டுகளாக நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனைக்குரிய கட்டமைப்புகளைக் கட்டி எழுப்பிய பெருமை அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு உண்டு.

குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு `கலைஞர் நூற்றாண்டு நூலகம்', `கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை', `கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் மைதானம்', `கலைஞரின் நினைவிடம்' என்று கழகத் தலைவர் வழிகாட்டுதலின்படி அண்ணன் அவர்கள் கட்டி எழுப்பியவை, ஏராளமானவை.

### பல்வேறு நூல்கள்!

இன்றைக்கு சொற்களாலும் கலைஞர் அவர்களுக்கு ஒரு கோட்டையைக் கட்டி எழுப்பியுள்ளார். அதுதான் இந்த ‘கலைஞர் எனும் தாய்’ என்ற புத்தகம். கலைஞர் அவர்களை எழுத்தாளராக, பத்திரிக்கையாளராக, ஒரு அரசியல் கட்சித் தலைவராக, ஒரு இயக்கத்தின் தலைவராக, முதலமைச்சராக முன்வைத்து பல்வேறு நூல்கள் வெளிவந்திருக்கிறது.




ஆனால், முதல்முறையாக கலைஞர் அவர்களை ஒரு தாயோடு ஒப்பிட்டு கலைஞர் ஒரு தாய் என்று வெளிவருகின்ற முதல் நூல் இது. பெண்கள் மட்டுமே தாய் அல்ல. வீரமுள்ள ஆண்மகன்களும் தாய் என்ற நிலையை அடைவதுண்டு என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்காகவும், நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்த கலைஞர் அவர்களை ‘தாய்’ என்று சொல்வது மிகவும் பொருத்தமான ஒன்று.

> **“முதல்முறையாக கலைஞர் அவர்களை ஒரு தாயோடு ஒப்பிட்டு ‘கலைஞர் ஒரு தாய்’ என்று வெளிவருகின்ற முதல் நூல் இது. பெண்கள் மட்டுமே தாய் அல்ல. வீரமுள்ள ஆண்மகன்களும் தாய் என்ற நிலையை அடைவதுண்டு என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்காகவும், நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்த கலைஞர் அவர்களை ‘தாய்’ என்று சொல்வது மிகவும் பொருத்தமான ஒன்று.”**

### பெருமிதமும் பெருமையும்!

ஒரு தாய் பிள்ளையை வளர்க்கிறார் என்றால், அன்பும் இருக்கும், கண்டிப்பும் இருக்கும், வாஞ்சையும் இருக்கும், பெருமிதமும் இருக்கும், பெருமையும் இருக்கும். கலைஞர் அவர்கள் தாய்க்குரிய இந்த குணங்களோடுதான் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனையும் வளர்த்தார்கள்.

கலைஞர் அவர்கள் தாய்மார்களின் முன்னேற்றத்திற்காகவும், ஒரு தாயைப் போல பல திட்டங்களைத் தந்தார்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்கள், காவல்துறையில் மகளிர், மகளிருக்கு குடும்பச் சொத்தில் சம உரிமை, உள்ளாட்சியில் மகளிருக்கு இட ஒதுக்கீடு என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

அதற்கு ஏராளமான உதாரணங்களை, இந்த நூலில் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் விவரித்துள்ளார்கள். கலைஞர் வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மகளிருக்குக் கட்டணமில்லா மகளிர் விடியல் பேருந்து திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் என்ற எண்ணற்ற திட்டங்களை தந்து வருகிறார்கள்.

### நூற்றாண்டு நாயகர்!

நூற்றாண்டு நாயகர் கலைஞர் அவர்களின் இளமைக் காலம் முதல் இறுதி காலம் வரை அவரின் போராட்டங்கள், சாதனைகள், வெற்றிகளை அண்ணன் வேலு அவர்கள் இந்த நூலில் அடுக்கியிருக்கிறார்.

`கலைஞர் எனும் தாய்' பல லட்சம் பிரதிகள் விற்பனையாகட்டும். விற்பனையில் மட்டுமல்ல படிப்போரின் வாழ்விலும் இந்த நூல் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தட்டும். அதற்கு எங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைஞர் அவர்களைப் போலவே இன்று கழகத்தையும், தமிழ்நாட்டையும் தாய்போல் காத்து வருகின்ற நம் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல் நூலினை வெளியிட உள்ளார்கள். முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

### வரவேற்பு!

கலைஞரின் அன்புக்குரியவர், நம் முதலமைச்சரின் நெருங்கிய நண்பர் புத்தகத்தின் முதல் பிரதியைப் பெற வருகை தந்துள்ள திரையுலக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். கழகப் பொதுச்செயலாளர் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

கழகத்தின் பொருளாளர், மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மாமா, கழகத்தின் முதன்மைச் செயலாளர் அமைச்சர் அண்ணன் நேரு அவர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்கள், கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

ஆன்மிக பெரியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களையும், இந்தியப் பத்திரிக்கை உலகின் மூத்த பத்திரிக்கையாளர் இந்து என்.ராம் அவர்களையும், ‘கலைஞர் எனும் தாய்’ பதிப்பித்துள்ள சீதைப் பதிப்பகத்தின் பதிப்பாளர் கௌரா ராஜசேகர் அவர்களையும் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன்.

நிகழ்ச்சிக்கு வந்துள்ள அனைத்து கூட்டணிக் கட்சி தலைவர்களையும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், அலுவலர்கள், எழுத்து, இலக்கியம், அரசியல் என பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகள், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள், எல்லோரையும் முக்கியமான முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் உங்கள் அத்தனைப் பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

## தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# ‘என் உயிரினும் மேலான...!’ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## தடங்கம் பெ.சுப்பிரமணி - முனைவர் பி.பழனியப்பன் தலைமை!

*தருமபுரி, ஆக.26-*

*தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி கல்லூரி மாணவ, மாணவியர்க்கு தருமபுரி ஜோதி மஹால் திருமண மண்டபத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளார் முனைவர்.பி. பழனியப்பன் ஆகியோர் தலைமையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி மற்றும் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன் மேலிடப்பார்வையாளராக கலந்து கொண்டார்.*

*சட்டமன்ற உறுப்பினர் தாயகம்கவி, மருத்துவர். யாழினி,டி.செங்குட்டுவன் குத்தாலம் அன்பழகன், பொள்ளாச்சி சித்திக் ஆகியோர் நடுவராக பணியாற்றினார்கள்.*

*200 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டனர்.இறுதியில் 23 மாணவ,மாணவியர் மண்டல அளவில் போட்டியில் பங்குபெற தேர்வு செய்யப்பட்டனர்.அவர்களுக்கு சான்றிதழ், கேடயம், ரொக்கம் ரூ.10000/ வீதம் ரூ.230000 வழங்கப்பட்டது. போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது.*

*ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம். ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,ஆர்.சிவகுரு மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அசோக்குமார்,கலைச்செல்வன்,செல்வராஜ்,கார்த்திக்,ராஜகோபால், மகேஸ்குமார்,தங்கசெழியன், கோடிஸ்வரன்,நாசர், ஹரி பிரசாத்,முத்தமிழ் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தனர்.*

*நிகழ்வில் முன்னாள் எம். பி. டாக்டர்.டி.என்.வி.எஸ். செந்தில்குமார்,மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,நகர செயலாளர் நாட்டான் மாது,ஐ.டி.விங் ஒருங்கிணைப்பாளர்கள் எம். பி.கௌதம்,கு.தமிழழகன், மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,*

*மாநில,மாவட்ட, ஒன்றிய,பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கலந்து கொண்டனர்.*




முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சியில் நடைபெற்ற ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றி பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி குறைகளைக் கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். நிகழ்வுகளில் அறந்தாங்கி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முக நாதன், அறந்தாங்கி மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.குமார்(ஏ) துரைக் கண்ணு மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.